இணைப்பு.

257ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 765-க்கான விடையைக் காண்க.

1980ம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15, 16—ம் தேதிகளில் புதுடெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்களின் நிலைக்குழுவின் (Standing Committee of Labour Ministers) முதலாவது கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருட்கள் மீதான கருத்துக்களைத் தெரிவிக்கையில் மத்திய அரசு இயற்ற உத்தேசித்துள்ள கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் வரைவுச் சட்டத்தினைப் பெரிதும் வரவேற்று இவ்வரசு கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளது:—

(1) கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழில் மிகவும் கடினமானதும் நிலையில்லாததுமான ஒரு தொழிலாகும். ஆகவே அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை பாதுகாப்புக்கு உத்திரவாதம் அளிப்பதற்கேற்ப சட்டத்தில் போதுமான வழிவகைகள் ஏற்படுத்த வேண்டும். இல்லாவிடில் இவ்வுரிமைகளைக் கோரும் தொழிலாளிக்கு அடுத்த நாளே வேலையிழக்கும் நிலை ஏற்படக்கூடும். ஆகவே துறைமுகத் தொழிலாளர்களுக்கு உள்ள சலுகைகள் போன்று இத்தொழிலாளர்களுக்கும் சலுகைகள் வழங்கும் வகைகளைக் கருத்திற்கொண்டு துறைமுகத் தொழிலாளர்களுக்குள்ளவை போன்று கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இச்சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

(2) கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், உணவு நிறுவனங்கள் சட்டம் இவற்றில் உள்ளது போன்று புகார்களைக் கவனிப்பதற்கென்று தனி அமைப்புக்களை நியமிக்க வேண்டும். கட்டிடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் தம் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இத்தொழிலாளர் நேரிடையாகவே தொழிலாளர் உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்கேற்ற வகையில் சட்டத்தில் வழிவகைகள் ஏற்படுத்த வேண்டும்.

(3) பெரிய அணைக் கட்டும் இடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு சட்டத்தில் வழிவகை ஏற்படுத்த வேண்டும்.

(4) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் குறித்து நாட்டிடைத் தொழிலாளர் நிறுவனம் (International Labour Organisation) ஏற்கனவே செய்துள்ள பரிந்துரைக்கேற்ப உத்தேசித்திருக்கும் சட்டத்தின் பிரிவு 2 (C)ன் கீழ்வரும் 'சிறுவர்' என்பதாக விளக்கத்தில் குறிப்பிட்டுள்ள வயது வரம்பை 16ஆக உயர்த்த வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS